# 17-வது ஹிந்தி ஒழிப்புக் கூட்டம்.

## நுங்கம்பாக்கத்தில் மாபெருங் கூட்டமும் ஊர்வலமும்.

(நமது நிருபர்)

சென்னை, ஜூன் 2.

1-6-38 மாலை 5 மணிக்கு சென்னை நுங்கம்பாக்கத்தில் ஹிந்தி ஒழிப்புக் கூட்டமும் ஊர்வலமும் நடைபெற்றன. ஊர்வலத்தில் உண்ணா நோன்பி தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்கள் கலந்துகொள்ள முடியாமற் போனதால் அவருடைய உருவப்படத்தை ஊர்வலமாகக் கொண்டுவந்தார்கள். "ஹிந்தி ஒழிக" "தமிழ் வாழ்க" "மந்திரி சபை ஒழிக" "ஸ்டாலின் வாழ்க" என்னும் கொடிகளுடனும் ஆரவாரத்துடனும் ஹிந்தி ஒழிப்புப் பாடல்கள் பாடிக்கொண்டும் ஊர்வலம் தெருக்கள் வழியே சென்று கடைசியாய் நுங்கம்பாக்கம் ஏரி மைதானத்தில் வந்து சேர்ந்தது. கூட்டத்தில் 2000 பேர்களுக்குமேல் பெருந்திரளாகக் காணப்பட்டது. தோழர் சுவாமி சண்முகானந்தர் அவர்கள் தலைமை பூண்டார்கள். சுவாமி அருணகிரி நாதர் தமிழ்க்கொடி பாட்டைப் பாடியதோடு ஹிந்தியை ஏன் ஒழிக்க வேண்டும் என்பது பற்றிப்பேசினார்கள். பிறகு மீனாம்பாள் சிவராஜ் அம்மையார் தமிழின் பெருமையை எடுத்துச்சொல்லி, ஹிந்தியை நுழைத்தால் அதனால் நேரும் கெடுதிகளை விளக்கினார்கள். வேலூர் தோழர் அநுமந்தராவ் அவர்கள் மந்திரி ராஜகோபாலாச்சாரியின் சூழ்ச்சிகளை எடுத்துக்காட்டி ஹிந்தி ஏன் கூடாது என்பதை மிக்க ஆர்வமிக்க பேச்சுடன் விளக்கினார். பிறகு அநுமந்தராவ் அவர்களின் மைத்துனியார் தாய் பாஷையின் அவசியமும் ஹிந்தியின் அனாவசியமும் என்பதுபற்றிப் பேசினார். பிறகு தோழர்கள இளங்கோவன் அவர்களும், மாணிக்கவாசகம் அவர்களும் ஊக்க உணர்ச்சியுடன் பேசினார்கள் பிறகு உண்ணாவிரதி தோழர் ஸ்டாலின் ஜகதீஸ் அவர்கள கூட்டத்தில் பேச முடியாதது பற்றி ஒரு கடிதாசியில் தமது கருத்தை எழுதித் தெரிவித்தார். அதில் தாம் இன்னும் பத்து நாட்களுக்கு மேல் இருக்க முடியாதென்றும் தமக்கு ஏற்பட்டிருக்கும் பலஹீனத்தினால், தான் இதனை உணருகிறதாகவும் குறிப்பிட்டபோது கூட்டத்திலிருந்த அனைவரும் மனமுருகி கண்ணீர் விட்டனர். பின்னர் வந்தனோபசாரத்துக்குப்பிறகு கூட்டம் 10-½ மணிக்குக் கலைந்தது.